செ.வெ.எண்: 55 நாள்: 25.01.2018

**போட்டித் தேர்வினை திட்டமிட்டு படித்து எழுதினால் வெற்றி நிச்சயம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் (மாவட்ட தொழில்நெறி வழிகாட்டும் மையம்) புதுக்கோட்டை சார்பில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (25.01.2018) நடைபெற்றது.

இந்த தொழில்நெறி கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் துவக்கி வைத்து கண்காட்சி அரங்கில் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் வகையில் வைக்கப்பட்டுள்ள போட்டித் தேர்வுகளுக்கான புத்தகங்களை பார்வையிட்டார். மேலும் பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கியதுடன் போட்டித் தேர்விற்கான பயிற்சி கையேடுகளையும் வழங்கினார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசுகையில் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு அரசு இளைஞர்கள் பல்வேறு போட்டித் தேர்வினை எதிர்கொண்டு வெற்றி பெறும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சார்பில் தொழில்நெறி வழிகாட்டும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் நடத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக்கல்லூரியில் பயிலும் மாணவிகள் பயன்பெறும் வகையில் போட்டித் தேர்வினை எதிர்கொள்ள இக்கருத்தரங்கம் துவக்கிவைக்கப்பட்டுள்ளது. இக்கருத்தரங்கில் மாணவிகளுக்கு உயர்கல்வி கற்றல், ஆசிரியர்களுக்கான தகுதி தேர்வு, அரசு மற்றும் தனியார்துறை வேலைவாய்ப்புகள், திறன் பயிற்சிகள், போட்டித் தேர்வுகள் உள்ளிட்ட பல்வேறு பயிற்சிகள் அலுவலர்கள் மூலம் வழங்கப்படவுள்ளது.

மேலும் இக்கல்லூரி மாணவிகள் பயன்பெறும் வகையில் இக்கல்லூரியில் நிரந்தரமாக போட்டித் தேர்விற்குரிய புத்தகங்கள் வைக்கப்படுவதுடன் இக்கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவிகளும் இதனை பயன்படுத்திக் கொள்ளலாம். புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து அதிக நபர்களை அரசு பணிகளுக்கு தேர்வு செய்யும் வகையில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சார்பில் பல்வேறு போட்டித் தேர்விற்குரிய கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இத்தகைய போட்டித் தேர்விற்குரிய கட்டணமில்லா பயிற்சி வகுப்புகளை புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள நபர்கள் உரிய முறையில்

பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நன்கு படிப்பவர்கள் மட்டுமே போட்டித் தேர்வுகளில் வெற்றிபெற முடியும் என்பது கிடையாது. சாதாரணமாக படிப்பவர்களும் போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறலாம். இவ்வாறு போட்டித் தேர்வில் வெற்றி பெறுவதற்கு போட்டித் தேர்விற்கு நன்கு திட்டமிட்டு படித்தாலே வெற்றி நிச்சயம். எனவே இத்தகைய பயிற்சி வகுப்புகளை மாணவிகள் முறையாக கற்று போட்டித் தேர்வில் வெற்றிபெற வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இக்கருத்தரங்கில் மண்டல இணை இயக்குநர் (வே.வா) மதுரை திருமதி.அனுசியாசெல்வி, உதவி இயக்குநர் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் (பொ) திரு.முருகேசன், அரசினர் மகளிர் கலைக்கல்லூரி முதல்வர் திருமதி.உமாராணி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**